வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருந்தே தீரும்

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.
MALAI MANI
(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (29—4—50) வெளியூர் (30—4—50) [இதழ் 239

சட்டவிரோதமானதென்று மத்திய சர்க்காரே கூறவில்லை

முடிந்திருந்தால் ராஜகோபாலாச்சாரி மந்திரிசபையே நீக்கி இருக்குமே!

சுயநலமிகளின் சூழ்ச்சிகளுக்கு மந்திரி சீதாராம்ரெட்டி கண்டனம்

"வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை நாங்கள் சட்டமாக்கவில்லை; அது பல ஆண்டுகளாக அமுலில் இருந்து வருகிறது. தோழர் சி. ராஜகோபாலாச்சாரி பிரதமர் பதவி வகித்த காலத்தில் (1937—39) கூட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எடுத்துவிட முடியவில்லை" என்று ரெவின்யூ மந்திரி தோழர் சீதாராம்ரெட்டி, திருநெல்வேலி எழுத்தாளர் மாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதைப் பாருங்கள்! "சட்டசபை விரும்பினால், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ரத்து செய்து சட்டம் இயற்றலாம்; அப்பொழுது அரசாங்கம் சட்டசபையின் விருப்பத்தின் படி நடந்துகொள்ளும்; நீங்கள், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை விரும்பாவிட்டால், அதை ஒழித்துவிட வேண்டுமென்று விரும்பினால் அடுத்த பொதுத் தேர்தலின்போது, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ரத்து செய்யும் எண்ணங்கொண்ட அங்கத்தினர்களையே வேண்டுமானால் நீங்கள் தேர்ந்தெடுங்கள்" அதோடு விட்டுவிடவில்லை தோழர் சீதாராமரெட்டி. "புதிய அரசியலமைப்பின்படி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் சட்டவிரோதமானதென்று சிலர் கூறினார்கள்; ஆனால், மத்திய அரசாங்கம் அவ்வாறு ஒன்றும் எங்களுக்கு அறிவிக்கவில்லை. ஆகையால், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்து சட்டபூர்வமானதாகத்தான் உள்ளது. எடுக்கப்படாத காரணத்தால், அதன்படி நடந்துகொண்டுதான் தீரவேண்டும்" என்று ஆணித்தரமாகக் கூறிவிட்டார் தோழர் சீதாராம் ரெட்டி.

மந்திரிகளே, இப்படித்தான். எங்கு, எது பேசுவதென்று தெரியாதா? எழுத்தாளர் மாநாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ வம்பு ஏன்? என்று பல கேள்விகள் எழுப்பப்படலாம். அவர் மீது குற்றமில்லை; அவரை அழைத்தவர்கள் செய்த சூழ்ச்சித் 'திருவிளையாடலின்' பயனே அது!

மந்திரிசபையின் முக்கிய அங்கத்தினர் தோழர் சீதாராம்ரெட்டி; அவரை எழுத்தாளர் மாநாட்டுக்குத்தலைமை வகிக்கும்படி அழைத்தார்கள்; பேனாவீரர்களாயிற்றே என்று பயந்து, தடைசொல்லாமல் அழைப்பை ஏற்றுக்கொண்டார். மந்திரி சென்றார், மாநாட்டுத் தலைமைப்பீடத்தில் அமர்ந்தார். எழுத்தாளர் சார்பில் தோழர் எஸ். வி. கோபால கிருஷ்ண அய்யர் பேசினார்: எழுத்துச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது; ஏடுகள் தடை செய்யப்படுகின்றன; இவை சுதந்திர சர்க்காரில் பொருந்துமா" என்றல்ல. எழுத்தாளர் மாநாட்டில் பேசிய அவர், ஒரு எழுத்தாளராகப் பேசவில்லை, ஆனால் ஒரு அய்பராகப்பேசினார்! அவர் கூறியது, சென்னை சர்க்கார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை உடனே ஒழிக்க வேண்டுமென்று; எழுத்தாளரை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் எவ்வாறு பாதிக்கிறதென்று நம்மால் புரிந்துகொள்ளக்கூட முடியவில்லை! மந்திரிகளை அழைத்து மட்டற்ற உபசாரம் செய்து, இவ்வாறு தூபம் போட்டால் ஏதாவது 'பயன்' கிடைக்குமென்றுதான் கோபால கிருஷ்ண அய்யர்கள் கருதுகிறார்கள். அப்படிச் செய்யப்பட்ட சூழ்ச்சியின் காரணமாகத்தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைச் சட்டபூர்வமாக்கிய ஜஸ்டிஸ் கட்சியோடு தொடர்பு கொண்டவராக இருந்திருக்கும் மந்திரி ரோச் விக்டோரியா, மதிதை (?) நிச் சேலத்தில் பேசிவிட்டார் போலும்! "பிராமணர்களும் கிருஸ்தவர்களும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்; ஆகையால், அதை ஒழித்துவிட வேண்டுமென்று சேலத்தில் தோழர் ரோச்விக்டோரியா கூறியுள்ளார். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏன் இருக்கவேண்டுமென்று நாம் பலமுறை எழுதியும், பேசியும் இருப்பதால் இதை மீண்டும் விவரிக்காமல் சுயநலப் போக்கே தான் தோழர் ரோச் விக்டோரியாவின் கூற்றுக்குக் காரணமென்று மட்டும் கூறுகிறோம்.

தோழர் கோபால கிருஷ்ண அய்யர் பேசியது, மந்திரி சீதாராம்ரெட்டிக்கு திராவிட இன உணர்ச்சியின் காரணமாக இரத்தக்கொதிப்பு உண்டாக்கி இருக்கவேண்டும்; அதன் காரணமாகத்தான் அவர் உணர்ந்து கூறினார். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றி விவாதிக்கத் தகுந்த இடம் எழுத்தாளர் மாநாடு அல்லவென்று கூறிய பின் தான்சிறிது விளக்கம் கூறினார்.

திராவிட இனத்தின் முன்னேற்றத்திற்கு வாய்ப்பும் வசதியும் தேவை; வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருந்தால் தான், நூற்றுக்கு 96 சதவிகிதமாக உள்ள நம் இன மக்கள்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

ஆஸ்திரேலியாவில் கம்யூனிஸ்ட் கட்சி சட்ட விரோதம்

—(o)—

மசோதாவை பிரதமர் மென்ஸிஸ் விளக்குகிறார்

ஸிட்னி, ஏப். 28—

ஆஸ்திரேலியாவில் கம்யூனிஸ்டு கொட்டத்தை அடக்க, அவர்கள் ஸ்தாபனம் சட்ட விரோதமானதென்று செய்யும் மசோதா ஒன்றை, பிரதமர் மென்ஸீஸ் ஆஸ்திரேலியா பார்லிமெண்டில் கொண்டுவந்தார். இதை அவர் விளக்கிப் பேசுகையில் வெளியிட்ட விவரமாவது:—

கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டு அதன் சொத்து விவரங்களைக் கவனிக்க ஒரு ரிஸீவர் நியமிக்கப்படுவார். எந்த ஸ்தாபனமும் கம்யூனிஸ்டுகளுடன் தொடர்புகொண்டிருந்தால், அவை சட்ட விரோதமாக்கப்படும். கம்யூனிஸ்ட் கட்சியில் ஏதாவது மெம்பர்களாக இருந்தால் அவர்களுக்கு 5 வருஷ சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

சர்க்காரிலும், தொழிற் சங்கங்களிலும் கம்யூனிஸ்டுகள் வேலை செய்ய இடம் பெறக்கூடாது.

ஐந்தாம் படைவேலையைத் தடுக்க இம்மாதிரி மசோதாகொண்டு வர வேண்டியிருக்கிறது. இம் மசோதாவுக்கு தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்களின் ஆதரவு ஏராளமாக இருக்கிறது.

பைத்தியக்காரர்களுக்கு படிப்பதில் ஆசை!

லண்டன், ஏப். 28—

பிராட்மோர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் உள்ள பைத்தியக்காரர்கள், வருஷத்தில் 1400 புத்தகங்கள்படித்திருக்கின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

ருமேனியாவில் அயல் நாட்டு நிருபர்கள் கைது

ஒரு ராணுவக் கோர்ட் விசாரணையிலிருந்தவரும் 5 ருமேனியர்கள் சம்பந்தப்பட்ட செய்தி விஷயமாக ஒரு லைவ் நிருபரும், ஒரு அமெரிக்க நிருபரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

நாட்டிற்குத் துரோகமான வேலையில் ஈடுபட்டதாகவும் தவறான செய்திகளைப் பரப்பியதாக இந்த ருமேனியர்கள் ஒப்புக்கொண்டனராம். இந்த நிருபர்களும் அவர்களுடன் சேர்ந்து வேலை செய்தனராம்.

மேற்குநாடுகளுடன் யூகோ அரசியல் உறவு

—(o)—

மார்ஷல் டிட்டோவின் நம்பிக்கை

மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் நல்ல அரசியல் உறவும், வர்த்தக உறவும் ஏற்படும் என்ற நம்பிக்கையை யூகோ பார்லிமெண்டில் மார்ஷல் டிட்டோ தெரிவித்திருக்கிறார்.

யூகோவுக்கும், கிரேக்கத்துக்கும் இடையேயுள்ள தகராறு சீக்கிரமே தீர்க்கப்பட்டுவிடும் என்றும், ஏதென்ஸில், யூகோஸ்தானீகர், சீக்கிரமே நியமிக்கப்படுவார் என்றும் அவர் கூறினார்.

இதாலியுடனும் நல்லுறவே கொண்டிருக்க யூகோ விரும்புகிறதென்றும் டிரிஸ்டே போன்றபிரச்னைகள் இதற்கு முட்டுக்கட்டையாக இருக்க வேண்டியதில்லை என்றும், ஆஸ்திரியாவுடன் உறவு நாளுக்கு நாள் அபிவிருத்தியாகிறதென்றும் அவர் கூறினார்.

காசி அலிகார் பல்கலைக்கழகங்களின் பெயர் மாறுகின்றன

—(o)—

இந்து, முஸ்லிம் இணைப்புப் பெயர்கள் துண்டிக்கப்படும்

—(o)—

கல்வி மத்திய ஆலோசனை போர்டின் ஒருமனதான முடிவு

புதுடில்லி, ஏப். 28—

காசியிலுள்ள பல்கலைக் கழகத்துடன் சம்பந்தப்பட்ட 'ஹிந்து' என்ற வார்த்தையும், அலிகாரிலுள்ள பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்பட்ட 'முஸ்லிம்' என்ற வார்த்தையும் சீக்கிரமே எடுபட்டுவிடும் என்று தெரிய வருகிறது.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற மத்திய ஆலோசனைப் போர்டு கூட்டத்தில், இந்த இரண்டு சர்வகலாசாலைப் பெயருடன் சேர்ந்துள்ள, வகுப்புகளைக் குறிக்கும் பதங்களை எடுத்துவிட வேண்டும் என்ற யோசனை, ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

இந்திய சர்க்கார், கல்வி மந்திரி இலாகா இந்த விஷயத்தில் சம்பந்தப்பட்ட சர்வகலாசாலை, அந்தப்பிரதேச சர்க்கார் இவைகளைக் கலந்து முடிவு செய்யவேண்டும் என்றும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்த யோசனை முன்பு வெளியிட்டபோது, அதற்கு ஏராளமான எதிர்ப்பு இருந்தது நினைவிருக்கலாம்.

டில்லி வரும்படி சென்னை உணவு கமிஷனருக்கு அழைப்பு

சென்னை மாகாணத்தின் 1950-51 வருஷ உணவு உற்பத்தி திட்டங்களைப் பரிசீலனை செய்வதன்பொருட்டு சென்னை சர்க்கார் உணவு கமிஷனரை டில்லி வரும்படி அழைத்திருப்பதாகத் தெரிகிறது.

உணவு கமிஷனர் மேமாதம் 2-ந்தேதி புதுடில்லியில் இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாலை மணி

சென்னை 29—4—50 சனிக்கிழமை

செத்த மொழிக்கு :: :: சிறப்பா?

சமஸ்கிருதம்-ஆரியமொழி, ஆரியர்களாலேபயிலும்மொழி. ஆரிய கலாசாரத்தைப் பரப்பும் மொழி, பேச்சு வழக்கில் மட்டுமேயிருந்த பிராகிருதத்திலிருந்து பிறந்த மொழி, பழந்திராவிட மொழியிலக்கணத்தை கண்டு அதற்கேற்ப திருத்தி அமைக்கப்பட்டமொழிதிருத்தி அமைக்கப்பட்டது என்னும் பொருளைத் தரும்சொல்லையே தனது பெயராகக் கொண்ட மொழி, சிந்துநதிக்கரையிலே வளர்க்கப்பட்ட மொழி, கங்கைக்கரை தீரத்திலே ஆதிக்கம் கொண்டமொழிதென்னாட்டின் மீது படையெடுத்த மொழி, பேச்சு வழக்கற்று எழுத்து வழக்கில் மட்டுமே இருக்கும் செத்தமொழி என்று வரலாற்றுணர்வு படைத்த மொழி நூலறிஞர்பலரும் வலியுறுத்திக் கூறியுளளனர்.

இவைகள் மறுக்கவோ, மறைக்கவோ முடியாதபடி வரலாற்று நூல்களில் இடம் பெற்றுள்ளன. மறுக்கவும், மறைக்கவும் ஆரிய இனத்தைச்சார்ந்த ஆதிக்க வகுப்பினர் முயன்றனர்; முயன்றும் வருகின்றனர், எப்படியோ இந்த உண்மை கள் உண்மைநாடும் வரலாற்றுணர்வு கொண்டோரின் உள்ளத்திலிருந்து அகற்ற முடியாதனவாகி விட்டன.

தமிழ்—தமிழகத்திலே இயற்கையோடு இயைந்து தோன்றி, வளர்ந்து, செழித்து நின்று, சிறப்புப்பெற்று எழில் குலுங்க, பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் இன்றளவும் இருந்துவரும் மொழியாகும். இந்த உண்மையையும் அதே வரலாற்றறிஞர்கள் திறமுடன் செப்பியுள்ளார்கள். சமஸ்கிருதம் தமிழகத்திற்கு வந்த மொழியேயல்லாது. தமிழகத்தில்தோன்றி வளர்ந்த சொந்த மொழியல்ல. தமிழுக்கிருக்கும் தனிச் சிறப்பை அழிக்கவும், இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் சமஸ்கிருதமே தாய்மொழி என்ற பொய்க் கூற்றை நிலை நிறுத்தவும், வரலாற்று உண்மைகளை மறைக்கவும், அவற்றைத் தேவையான இடங்களில் மாற்றி அமைக்கவும் ஆதிக்க வகுப்பினர் பலரும் கைத்திறனையும், வாய்த்திறனையும் காட்டிப் பாடுபட்டு வருகின்றனர்.

இக்கால மக்களுக்கு, அதுவும் குறிப்பாகத் தமிழக மக்களுக்கு எந்த வகையிலும் பயன்படாத, உறவு இல்லாத சமஸ்கிருத மொழியை, நாட்டின் பொது மொழியாகவும், அரசியல் மொழியாகவும் ஆக்க, ஆரிய ஆதிக்க வகுப்பார் துடியாய்த் துடிக்கிறார்கள்! செத்த மொழி அரசியல் மொழியாக வேண்டுமாம்! பொது மொழியாகவும் இருக்க வேண்டுமாம்! இப்படி அன்றாடம் பிதற்றி வருகின்றனர், அவ்வகுப்பைச் சேர்ந்த பலர்! ஆசை—பேராசை—சுய நலப் பேராசை - சொந்த இன சுயநலப் பேராசை, அவர்களை இப்படியெல்லாம் பிதற்ற வைக்கின்றன, சமஸ்கிருதத்திற்கு உயிர் கொடுக்க அல்லும் பகலும் பாடு படுகின்றனர். "சமஸ்கிருதத்தின மேன்மை" "சமஸ்கிருதத்தின் அவசியம்", "சமஸ்கிருதக் கலாசாரப் பெருமை", 'சமஸ்கிருதத்தை அரசியல் மொழியாகக் கொள்ள வேண்டியதன் அவசியம்,' 'சமஸ்கிருதத்தை உயிர்ப்பிக்கும் வழி" என்ற தலைப்புகளிலேசமஸ்கிருதத்தைத் தாய் மொழியாக (இல்லை! அவர்கள் மரபுபடி தந்தை மொழியாக) கருதுவோர் பேசுகின்றனர் அன்றாடம்; அவற்றிற்குப் பத்தி பத்தியாக விளக்கங் கொடுக்கின்றனர் தங்கள் பத்திரிகைகளில் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள். தோழர் மாதவ மேனன் போன்ற "அடிப்பொடி ஆழ்வார்கள்" அவர்களுக்கு ஆதரவு தருகின்றனர்!

செத்த சமஸ்கிருதத்தை மீண்டும் உயிர்ப்பிப்பது என்பது ஆகாத காரியம் அது நடைபெறுது.

இந்தக் கருத்தை வெளியிடுபவர் நாம்தான் என்று, படித்தவுடனேயே பலருக்கு எண்ணம் தோன்றும். இதைவெளியிடுபவர் நாம் அல்ல, **சர் எஸ். வரதாச்சாரியாவார்**

ஸர். எஸ். வரதாச்சாரி, சமஸ்கிருதத்தைத் தாய்மொழியாகவோ, தந்தை மொழியாகவோ கருதும் பிராமணுைத் தம' குலத்தில் உதித்தவர் தான். சமஸ்கிருதத்தில் நல்ல பாண்டித்தியம் பெற்ற வித்தகர் ஆவார். அப்படிப்பட்டவர் தான் கூறுகிறார், பம்டாய் டாரத்ய வித்யாபவன் கூட்டத்தில், சமஸ்கிருதத்தை மீண்டும் உயிர்ப்பிப்பது என்பது ஆகாதகாரியம் என்று.

சமஸ்கிருதத்தை உயிர்ப்பிக்கும் வீண்வேலையிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கும், ஆசைவெறியர்களுக்கு, மூன்று காரணங்களைச்சொல்லி, அவர்களை ஆசை மயக்கத்திலிருந்து தெளிவடையச் சொல்லுகிறார் ஸர் எஸ். வரதாச்சாரியார்.

அம்மூன்று காரணங்களாவன.

சமஸ்கிருதம்.

(1) உலகியல் வாழ்வுக்கான வகைகளைக் கூருதது

(2) வாழ்க்கை நலத்திற்குப் பயன்படாதது,

(3) பாமரப் பொதுமக்கள் எளிதில் கற்றுணர்ந்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்ததுமில்லை இனிமேல் இருக்கப் போவதுமில்லை. என்பனவாகும்.

சமஸ்கிருதம் மேற்கூறிய மூன்று வகைகளிலும், மக்களின்தேவையை நிறைவேற்ற இயலாத தாய்ச் செத்த மொழியாக இருக்கிறது என்ற உண்மைக் கருத்தை ஒளிவுமறைவு இல்லாமல், சொல்லியதற்காக ஸர். எஸ். வரதாச்சாரியாரைப் பாராட்டத்தான் வேண்டும்,

சமஸ்கிருதம் செத்தமொழிகளின்வரிசையில்தான்வைத்து எண்ணப்பட வேண்டியிருக்கிறது என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார் அந்தக் கூட்டத்தில்

"மற்ற உயர் தனிச்செம் மொழிகளைப்போல். சமஸ்கிருதமும் நாளுக்குநாள் மறைந்து ஒழிந்துதான் போகவேண்டி வரும். பிரிட்டனில் லத்தின் கிரேக்கம் ஆகியமொழிகளுக்கு ஏற்பட்டகதியே போதிய சான்றாகும்" என்று வற்புறுத்தியுள்ளார்.

இந்திய கலாசாரத்தைத் தாங்கிக் கொண்டிருக்க அது பயன்பட்டால் பயன்படுமேயொழிய, வேறு எதற்கும் அது பயன்படாது என்ற கருத்தையும், அந்தக் கூட்டத்தில் அவர் வலியுறுத்தியுள்ளார். இன்றைய நிலையில் சமஸ்கிருத விசுவாசிகளான ஆதிக்க வகுப்பினர், ஆரிய கலாசாரத்தைத் தாங்கிவரும் கலமாகத்தான் சமஸ்கிருதத்தைக் கருதி, போற்றிக், காப்பாற்றி வருகின்றனர். அது அரும் மொழியாக ஆகிவிட்டால், தம் முழு ஆதிக்கத்தையும் எல்லாத் துறைகளிலும் செலுத்தலாம் என்பதே அவர்களின் 'அபிலாஷை'!

'சமஸ்கிருதத்தைக் கலாசாரத் துறையில் உயிர்ப்பிக்க வேண்டும் என்று ஒரு பக்கம் கூறிக்கொண்டும், அதே வேளையில் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு,அதற்குப் பதிலாகஇதனைப்பயன்படுத்த வேண்டும் என்று மற்றொரு பக்கம் சொல்லிக்கொண்டும் இருப்பது முரண்பாடுடையதாகும்" என்று கூறி,சமஸ்கிருதஆவேசக் காரர்களைப் பரிகசிக்கவும் செய்கிறார்.

சர் வரதாச்சாரியார் கூற்று ஆதிக்க வகுப்பினருக்குத் தெளிவு பயந்தாலும், பயக்காவிட்டாலும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோரனைவர்க்கும் தெளிவுபயக்க வேண்டும் என்பதற்காகவே, அவரது அரிய கூற்றை இங்கு எடுத்துக்காட்டினோம்.

செத்த மொழிக்குச் சிறப்பு தேடப்படுகிறது; அதே வேளையில் சிறந்த தமிழ் மொழி சிதைக்கப்பட்டுச் சீரழிவுப்பாதையில், கடைகோடியில் தள்ளப்பட்டிருக்கிறது. இந்த நிலையைத் தெளிந்து, தெருவெல்லாம் தமிழ் முழக்கமே செழிக்கச் செய்ய தமிழகத்து மக்கள் அனைவரும் பாடுபட முன்வருவார்களாக!

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

		ரு அ. பை.
முன்வரவு		1567—0—0
சி. ஏ. கணேசன்,	சென்னை	0—15—6
செல்லையா—கருப்பையா,	மணம்பூண்டி	1—0—0
ஏ. எம். அப்துல்காசிம்,	கீழக்கரை	1—0—0
கே. வேதநாயகம்,	திருப்பத்தூர் (வ-ஆ)	1—0—0
ஏ. பாலகிருஷ்ணன்,	,,	1—0—0
பி. குருசாமி,	,,	1—0—0
அம்மாக்கண்ணு அம்மாள்,	,,	0—9—0
ராமசாமி,	,,	0—8—0
பி. தண்டபாணி,	,,	0—8—0
தனநடராஜன்,	,,	0—8—0
டி. எம். கோவிந்தசாமி,	,,	0—8—0
ராஜம்மாள்,	,,	0—8—0
லூர்துமேரி,	,,	0—8—0
சோமசுந்தரம்,	,,	0—8—0
கோபால் செட்டி,	,,	0—8—0
ஆர். பழனிச்சாமி,	,,	0—8—0
சூரியராவ் வரதன், தண்டபாணி, பார்வதி	,,	1—0—0
சி. மு. பரமசாமி	மேலஉரப்பனூர்	1—0—0
கருப்பையா,	,,	1—0—0
என். சொக்கர்,	அத்துக்குடி	1—0—0
வி. கோவிந்தராஜி,	உறையூர்	1—0—0
ஆ. சிவப்பிரகாசர்,	சிவதாபுரம்	2—0—0
சி. பெ. காவேரி,	,,	1—0—0
கா. சரோஜா,	,,	1—0—0
கா. மாலைமணி,	,,	1—0—0
பி. ஆனையப்பன்,	,,	1—0—0
பெ. கிருட்டிணன்,	,,	1 0—0
பொன்னுரங்கம்,	வேளாள தேனும்பேட்டை	1—0—0
எம். ஆர். சந்திரன்,	சென்னை	1—0—0
எஸ். குருசாமி,	மதுரை	1—0—0
தி. ப. சி, நடராசன் & கோ,	மதுரை	2—0—0
க. வெ. பெரியசாமி,	,,	1—0—0
அ. தங்கராசு,	,,	1—0—0
வ. கெ. செ. வீரகுருமாரு,	கல்லூரணி	5—0—0
வி. சவுரிமுத்து,	விருதுநகர்	3—0—0
மா கிருட்டிணன்,	சென்னை	1—0—0
க. வே. சண்முகசுந்தரம்,	கட்டியாம்பந்தல்	1—0—0
நா. சுப்பையா,	ஒட்டநத்தம்	5—0—0
ஆ. சு. பாலகிருஷ்ணசாமி,		1—0—0
பி. வி. ராதா,	பொள்ளாச்சி	1—0—0
பொன்னழகி கண்ணதாசன்,	காரைக்குடி	2—0—0
"அருணன்" ஆசிரியர்	,,	1—0 0
சி டி. என். இராமையா	,,	3—0 0
ஏ. நாடாக்கண்ணு,	பாலூர் சத்திரம்	2—0 0
பி வி. சுப்பையா,	பவானிசாகர்	1—0—0
தி மு. க. மாயவரம் கிளை		10—0—0
தி. மு. க. பொள்ளாச்சி கிளை		10—0—0
		1643—0 6

மலேயா மொழியில் கணக்கு வைப்பது கடினம்

இந்திய வர்த்தகர்கள் எதிர்ப்பு

குலாலம்பூர், ஏப். 28—மலேயா மொழியில் வர்த்தகக் கணக்குகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்று, மலேயா சர்க்கார் கொண்டு வரவிருக்கும் மசோதாவை ஆட்சேபித்து,ஷெலங்கார் இந்திய வர்த்தகசபை அட்டார்னி ஜெனரலுக்கு ஒரு மனுவை அனுப்பியிருக்கின்றனர்.

தூக்குத்தண்டனை அவசியமா?

லண்டன், ஏப். 28—தூக்குத்தண்டனை இருக்கவேண்டியது அவசியம்தானு, அவசியமில்லையா என்பதுபற்றி அமல் நாடுகளிலிருந்து அபிப்பிராயங்களை ராயல் கமிஷன் சேகரித்து வருகிறது. இக் கமிஷனின் முடிவான ரிப்போர்ட் அடுத்த வருஷம்தான் வெளியாகுமாம்.

கனடாவின் புதிய கவர்னர் ஜெனரல்

உள்நாட்டில் பிறந்தவருக்கே பதவி

ஆட்டவா, ஏப். 28—ஆஸ்திரேலியா தென்னாப்பிரிக்காவிலுள்ளதுபோல உள்நாட்டிலேயே பிறந்தவருக்குக் கவர்னர் ஜெனரல் பதவி கனடாவில் அளிக்கப்படவிருக்கிறது.

இப்பொழுது கவர்னர் ஜெனரலாக உள்ள அலெக்ஸாண்டர், ஆகஸ்டில் ராஜிநாமா செய்வார் என்றும், அட்லாண்டிக் உடன்படிக்கையின் கீழ் இவருக்கு முக்ய ராணுவ பதவி கொடுக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

பிரிட்டனில் முன்பு கனடாவின் ஹைகமிஷனராக இருந்த வின்லென்ட் மாஸீ கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. இவர் கனடாவிலேயே பிறந்தவர்.

மே விழா

பொதுக்கூட்டம்

1—5—50 திங்கள் மாலை 5-30 மணிக்கு
சென்னை கான்ரான்ஸ்மித் நகர்
மைதானத்தில் நடைபெறும்
தோழர் சி. என். அண்ணாத்துரை M.A.
வங்கக் கவி
ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயா
ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்
சூளை தி. மு. கழகத்தார்.

மங்கையர் உயர்ந்தால்தான் மாநிலம் முன்னேறும்

ஆசிய பெண்கள் மாநாட்டில் தோழியர் வித்தியாவதி தலைமையுரை

நைரோபி, தபால்.

முன்பு இருந்து வந்த மனக் கசப்பையும், பலனற்ற முயற்சியையும் மறந்துவிட்டு, நாமும் நம் சந்ததிகளும் நன்முறையில் வாழ்வதற்குரிய நாட்டை அமைப்பதற்கு நாம் பாடுபடுவோமாக. இந்த நாட்டைத்து உத்வேகம் பொருந்திய வளர்ச்சி பெற்று வரும் நாடாகும். 15 அல்லது 20 வருஷங்களுக்குமுன் இங்கு வந்த எம்மில் பலர் இப்போது நம் கண்முன் ஏற்பட்டுள்ள இவ்வளவு மாறுதல்களை கற்பனை கூட செய்ய முடியாததாக இருக்கிறது. அடுத்த பத்து வருஷகாலத்திலே இதைவிட வித்தியாசமான மாறுதல்கள் ஏற்பட்டேதீரும். நமக்குத் தீர்க்க திருஷ்டியும் பொறுமையும் மட்டும் இருக்குமானால், செல்வச் சிறப்பு வாய்ந்த பரிபூர்ண வாழ்க்கை அளிக்கும்வழி நம் கைக்குள் அடங்கியதாகவே இருக்கும்" என்று கென்யாவின் தோழியர் வித்தியாவதி சோக்ஸி, நைரோபி நகரில் ஏப்ரல் 22-ந்தேதி துவங்கிய கிழக்காப்பிரிக்க ஆசிய மாதர் மாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசியபோது கூறினார். அங்கே, பல இன மக்களிடையிலும் பல வகுப்பு மக்களிடையிலும் இருந்து வரும் உறுதியற்ற, நிர்ணயமில்லாத தொடர்பு உறவுகள் பற்றி அவர் வருத்தம் தெரிவித்தார்.

மாநாட்டுக்கு வந்திருந்த ஐரோப்பிய ஆப்ரிக்க சகோதரிகளை வரவேற்றுப் பேசுகையில், ஆப்ரிக்க மாதர்களுக்குக் கல்வி போதனை வசதியளிப்பது பற்றி வற்புறுத்தினார். "ஆண்களுக்குக் கல்வியளிப்பதால் தனி நபர்கள் கல்வி கற்றவர்களாகிறார்கள்; ஆனால், பெண்களுக்குக் கல்வியளிப்பதால் குடும்பமே கல்வி நிறைந்ததாகிறது" என்று அவர் கூறினார். பள்ளிகளும் வைத்தியசாலைகளும் குறைவாயிருப்பதைக் குறிப்பிட்டுவிட்டு, அது விஷயத்தில் ஆசிய மாதர்களின் பரோபகார உள்ளம் நாட்டுக்கு உதவபுரிய வேண்டுமென்று கோரினார். மாதர்கள் நகரசபைகளின் கல்வி, சுகாதாரக் குழுக்களில் கலந்து வேலை செய்ய வேண்டுமென்று தெரிவித்தார். மாதர்கள் விளையாட்டு வேடிக்கைகளிலும் பங்கெடுத்து, தங்களுக்குள்ள ஆக்க வேலைத் திறமை பரிமளிக்கும்படி செய்யவேண்டுமென்று வலியுறுத்தினார்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான சம்பளம் அளிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்துகையில், அதே விதவேலைக்கு அதே விதமான சம்பளம் அளிக்கப்படவேண்டும் என்று ஐ. நா. ஸ்தாபன மனித உரிமை சாசனத்தில் கூறப்பட்டிருப்பதைத் தோழியர் சோக்ஸி எடுத்துக் காட்டினார்.

வரவேற்புக் குழுவின் தலைவரான டாக்டர் தோழியர் சவிதா தேவி நந்த் தமது வரவேற்புரையில் மற்பல மாதர் சங்கங்களும் செய்துவரும் பொது நலத் தொண்டுகளைப் பற்றி விவரித்துவிட்டு, அவை எல்லாம் வகுப்பு அடிப்படையில் அமைந்திருப்பது வருந்தத் தக்கதென்பதை அறிவித்தார். ஒரு ஐக்கியப்பட்ட ஆக்க வேலை முயற்சி நடத்துவது அவசியமாகையால்தான், ஆசிய மாதர் சங்கம் ஏற்பட்டது என்றும் கூறினார்.

ஆசிய மாதர்கள் இந்த நாட்டில் எவ்வளவோ அரிய சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். ஆப்பிரிக்காவின் கடைகோடி மூலைகளுக்கெல்லாம் அவர்கள் தங்கள் கணவர்களுடன் வந்து குடிபுகுந்திருக்கிறார்கள். பற்பல தொல்லைகளை சகித்துக்கொண்டிருக்கிறார்கள்; வெரிதும் மாறுபட்ட பருவநிலைகளைச் சமாளித்து வருகிறார்கள்; உற்றார் உறவினரைப் பிரிந்திருக்க இசைந்திருக்கிறார்கள்; இது ஆசிய மாதர்களை பொறுத்தவரையில் சகிக்கக்கூடிய ஒரு கஷ்டமாகும். வெள்ளை மாதர் எங்கே சென்றாலும், தங்களுக்கு ஓர் உயர்வு உண்டு என்பதை உணர்ந்து தைரியத்துடன் போய் வருகிறார்கள்; ஆனால் ஆசிய மாதர்கள் தங்கள் நல்லெண்ணத்தையும், மனத்துணிவையும் மட்டிலும் துணையாக வைத்து, மக்களிடையே நல்லுறவைத் தேடவேண்டியதாயிருக்கிறது. குடும்பக் கடமை என்ற ஒப்பற்ற லட்சியத்துடன் அவர்கள் இதைச் சாதித்து வருகிறார்கள்; அவர்களது ஒப்பற்ற மனத்துணிவும், பொறுமைக் குணமும் இதற்குத் துணைபுரிகின்றன" என்று தோழியர் நந்த் கூறினார்.

இன்னும் உன்னத லட்சியங்களை அடைவதற்காக விரிவான துறைகளில் இதே அரிய குணங்களை அவர்கள் பயன்படுத்த வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். தாய்மார்களின் மாதர் முற்போக்கு அதி துரிதமாக நடந்து வருகிறது என்பதை அவர் எடுத்துக் காட்டினார், எவ்விதமான சமூகம் அமையவேண்டும் என்பதை, அவர்களேதான் நிர்ணயிக்க முடியும். ஒன்றை ஒன்று பகைக்கும் முரணான பிரிவினை நிறைந்த சமூகந்தேவையா என்பதை அவர்கள் முடிவுசெய்தாகவேண்டும். இனச் செருக்கும், ஜாதி அகம்பாவமும் ஒரு சமூகத்தை அழிவிற்கே இழுத்துச் செல்லும், பிளவு விதைத்தால் வினைதான் அறுக்க முடியும், ஐரோப்பிய, ஆப்ரிக்க, ஆசிய மக்கள் ஒருங்கிணைந்த சமுதாயத்தை ஆக்குவதற்குழைக்கும் சந்தர்ப்பம் ஆசிய மாதருக்குக் கிடைத்திருக்கிறது என்று அவர் கூறினார். முதல் படியாக அவர்கள் தங்களைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

உகாண்டா, கெனியா, டங்கனிகா முதலிய பல தொலையிடங்களில் இருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். நைரோபி சங்கத்தின் ஏற்கெனவே ஆசியரல்லாத மாதர்களுக்குக் கௌரவ அங்கத்தினர் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

இனி நடப்பவை

சென்னை சிந்தாதரிப்பேட்டை:- தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 29—4—50 அன்று இரவு 8 மணிக்கு அய்யாமுதலிதெரு நெ. 82, இல்லத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் தவறாது வரமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

திருச்சிராப்பள்ளி:— திருவள்ளுவர் தமிழ்க் கழகத்தின் ஆதரவில் தொடர்ந்து நடைபெற்றுவரும் திருக்குறள் 45-வது வகுப்பு 30-4-50 மாலை 6 மணிக்கு பெரிய கடைவீதி பறக்கடை தண்ணீர்ப் பந்தல் சத்திரத்தில் நடைபெறும் புலவர் தி. பி. ஞுழக்கைவேலனார் அவர்கள் 'மடியின்மை' அதிகாரத்தை விளக்குவார். பின் 'மனோன் மணியம்' வகுப்பு நடைபெறும்.

* * *

சென்னை, திருவல்லிக்கேணி:— வ. உ. சி. இளைஞர் மன்றத்தின் சொற்பயிற்சிக் கூட்டம் 30-4-50 அன்று காலை தோழர் எஸ். சண்முகம் அவர்கள் தலைமையில், 'தமிழகத்தில் இளைஞர் கடமை' என்னும் பொருள் பற்றிப் பல தோழர்கள் பேசுவர். இடம்:—3, குள அருணாசல முதல் தெரு.

* * *

சென்னை:—சிந்தாதிரிப்பேட்டை இந்திய மக்கள் கழகச் சார்பில் 28 வெங்கடேச கிராமணித் தெருவில் உள்ள கழகக் கட்டிடத்தில் 30—4—50 காலை 9 மணிக்கு என்னைக் கவர்ந்த நாவல்' என்ற தலைப்பில் பல தோழர்கள் பேசுவர்.

* * *

சென்னை:—தமிழர் தனியரசுக் கழகத்தின் சார்பில் 30—4—50 காலை 10 மணிக்கு 12, கிருஷ்ணப்பநாய்க்கன்குளத் தெருவில் 'கலப்பு மணம்' என்ற பொருள் பற்றி தோழர் வெ. வேணுகோபால் தலைமையில் சொற்பயிற்சி நடைபெறும். தோழர்கள் ஞானசேகரன் சந்திரசேகரன் ஆகியோர் பேசுவார்கள்.

அவசரத் தபால்கள்

தந்தி ஆபீசுகள் மூலமாகப் பட்டுவாடா செய்யப்படும்

அவசரத் தபால்களைத் தாமதமறப் பட்டுவாடா செய்யும்பொருட்டும், ஞாயிற்றுக்கிழமைகளில் தபாலாபீசுகள் மூடப்பட்டிருக்கும் போது அவசரத் தபால்கள் சரிவர பட்டுவாடாவாகும்படி பார்த்துக் கொள்ளும்பொருட்டும், 1950 மே முதல் தேதி முதல் எல்லாவிதமான அவசரத் தபால்களையும், இலாகா தந்திக் காரியாலயங்கள், இணைக்காரியாலயங்கள் அல்லது லைசென்ஸ்—தந்திக் கூட்டுக் காரியாலயங்கள் மூலமாகவே பட்டுவாடா செய்வதென முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் அவசரத் தபால்கள் பட்டுவாடா செய்வதற்கான இந்தப் புதிய ஏற்பாடு, ஆரம்பத்தில் ஜில்லாத் தலைமைக் காரியாலயத்திலுள்ள ஆபீசுகளில் மாத்திரமே அமுலிலிருக்கும்.

இந்த ஏற்பாடு வெற்றிகரமாக நடைபெறப் பொதுஜனங்களும் உதவவேண்டும். அவசரமாகப் பட்டுவாடா செய்யப்படவேண்டிய தபால்களிலெல்லாம் "எக்ஸ்பிரஸ் டெலிவரி" என்று எழுதப்பட்டுள்ள சிகப்பு நிற லேபிள்களைத் தவறாமல் ஒட்டுவதன்மூலம் பொதுஜனங்கள் உதவி செய்ய முடியும். இந்த லேபிள்கள் எல்லாத் தபாலாபீசுகளிலும் இலவசமாகக் கிடைக்கும். அவசரத் தபால்களில் இந்த லேபிள்களை ஒட்டப்படாமலிருந்தால், அந்தத் தபால்கள் பட்டுவாடா ஆவதில் தாமதமேற்படக் கூடுமென்று மீண்டுமொருமுறை எடுத்துக் கூறப்படுகிறது.

(ஏ. பி., ஐ.)

பஸ்ஸில் பிரசவம்

கொழும்பு, ஏப். 28—

கொழும்பு 'சப் அர்பன்' இரவிடத்துக்கு பஸ்ஸில் பிரயாணம் செய்த பூரண கர்ப்பிணி பஸ்ஸிலேயே குழந்தையைப் பிரசவித்தாள்.

பஸ் கொலுபிடியா போலீஸ் ஸ்டேஷன் அருகே நிறுத்தப்பட்டுவிட்டது. ஸ்டேஷனிலிருந்த போலீஸ் சுற்றுப்புறத்தில் வசிக்கும் மூன்று பெண்களை கர்ப்பிணிக்கு உதவிசெய்ய அழைத்துவந்தனர். பின்னர் தாயும் குழந்தையும் 'டிலோயா மெடோனிடி' ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

வகுப்புவாரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிதாவது முன்னேற முடியும். இதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். அவர்களின் உணர்ச்சி மந்திரி சீதாராம் ரெட்டிக்குத் தெரியும்; அந்தத் தைரியத்தில் தான் இண்டாவதாகக் கூறுகிறார். "வேண்டுமானால், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கருதினால் அதற்குத் தகுந்த சட்டசபை அங்கத்தினர்களை வேண்டுமானால் தேர்ந்தெடுங்கள்" என்று.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ரத்து செய்துவிடுவதே தேர்தல் திட்டம் என்று கொண்டு, ஒருவர்போட்டியிட்டால், அவருக்கு நூற்றுக்கு மூன்று ஓட்டுகள்தான் கிடைக்குமென்று மந்திரியார் நன்கு உணர்ந்திருக்கிறார்!

சட்டத்தைப் படித்துப் புரிந்துகொள்வதில் தமக்கே பிரத்தியேகத் திறமையுள்ளதென்று கூறிக்கொள்ளும் சிலர், இந்திய அரசியலமைப்பை இராப்பகலாகப் படித்து, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் செல்லுபடியாகாதென்று தாங்கள் கண்டுபிடித்துவிட்டதாகக் கூறுகிறார்கள். அவர்கள் கூறுவது உண்மையல்லவென்று தமக்குள்ள சட்ட அறிவைக் கொண்டுமட்டும் மந்திரியார் கூறவில்லை. மத்திய அரசாங்கம் ஒன்றும் கூறவில்லை. ஆகையால், இருப்பதையொட்டித்தான் நடந்துகொள்ளவேண்டும், வீண் கூப்பாடு ஏன் போடுகிறீர்கள் என்று முகத்தில் அறைந்தாற்போல் கூறிவிட்டார்.

செஞ்சீனாவில் சோஷலிசம் பரவும்

லண்டன், ஏப். 28—

செஞ்சீனாவில் சோஷலிசம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், அதற்கான வழியில் மக்களை சீன கம்யூனிஸ்டுகள் தயார் செய்ய முயற்சி எடுத்து வருவதாக கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி விளம்பர இலாகா டைரக்டர் லுடிங்யி கூறுகிறார்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

30 - 4 - 50

திண்டுக்கல்:—மு. கருணாநிதி, ஈ. வெ. கி. சம்பத், என். ஈ. பாலகுரு, எஸ். அப்பாவு, எஸ். முத்து

வேலூர்: கா. அப்பாத்துரை, சி. பி. சிற்றரசு

பவானி:—கெ. இளம்வழுதி, எஸ். ஆர். சுப்ரமண்யம், ஜி. என். ராஜு.

ஆம்பூர்:—ஆசைத்தம்பி.

குணியமுத்தூர்:—இரா. நெடுஞ்செழியன், எஸ். சின்னத்துரை, பி. பாலசுந்தரம்

1 - 5 - 50

மே விழாக் கூட்டங்கள்

சென்னை:—சி. என். அண்ணாத்துரை

மதுரை:—அ. சித்தையன்

கோவை:—இரா. நெடுஞ்செழியன்

குரிசிலாப்பட்டு:—சி. பி. சிற்றரசு

கோவில்பட்டி:—ஆசைத்தம்பி

கோலார் தங்கவயல்:—என். வி. நடராசன்

ஈரோடு:—மு. கருணாநிதி, எஸ். அப்பாவு, என். ஈ. பாலகுரு, எஸ். ஆர். சந்தானம், ஆர். பெருமாள்.

திருச்சி—(காலை) க. அன்பழகன், எம். எஸ். மணி, ஜி. பராங்குசம், எஸ். நெடுமாறன்.

பொன்மலை:—(மாலை) க. அன்பழகன், டி. கே. சீனிவாசன்

மே நாள் விழா !

மே நாள் விழா! மேதினி எங்கும் கொண்டாடப் பெறும் பெருவிழா! உழைப்பாளிகளுக்கு உணர்ச்சி ஊட்டும் உயரிய விழா!

அலைகடலையும், மலை முகட்டையும், அரசியல் எல்லையையும், சமுதாயப் பிரிவையும், நிறவேற்றுமையையும் தாண்டி உலகத் தொழிலாளர் அனைவரும் ஒன்றுகூடி கொண்டாடும் விழா **மே நாள் விழா வாகும்!**

புது வாழ்வைக் கண்டோர்க்கும், புது வாழ்வைக் காண விரும்புவோர்க்கும், காணும் முயற்சியில் ஈடுபட்டோர்க்கும், மே நாள் விழா புது ஆற்றல் அளிக்கிறது—நிலைமையை வலுப்படுத்த, போராட்டங்களில் வெற்றி பெற!

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்; அவன் காணத் தகுந்தது வறுமையா? என்று பெருமூச்சுடன் கேட்டு, "இனிக் கொஞ்சும் உத்தேசமில்லை, புதியதோர் உலகைச் செய்தே தீருவோம்" என்ற போர் முழக்கத்துடன் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட உழைப்பாளர்கள் உலகெங்கும் போராடுகின்றனர். தங்கள் உழைப்பைக் காட்டி, உழைப்பின் பலனைக் காட்டி, உழைக்காதவர்களின் உல்லாச வாழ்வையும், உழைத்தோரின் உலுத்த வாழ்வையும் காட்டி. சமூக நீதி கேட்கின்றனர்; பொருளாதார வாழ்வு கேட்கின்றனர்; அரசியல் உரிமை கேட்கின்றனர்! அந்தக் கேள்விக் குறியை, ஆட்டிப் படைக்கும் ஆளும் வர்க்கத்தின் முன் நிலைநிறுத்தும் நாளே மே முதல் நாள்!

வாழ்வுக்கான வசதிகள் கேட்கின்றனர் தொழிலாளர்கள் - அவற்றைத் தர மறுக்கின்றனர் முதலாளிகள் தொழிலாளியும் - முதலாளியும் சந்திக்கமுடியாத அளவுக்கு வேற்றுமை வளர்ந்து, உலகெங்கும் இருபடை வரிசைகள் உண்டாகி, போராட்டம் நடைபெறுகிறது.

போராட்டங்கள் பல இடங்களிலே வெற்றியைத் தந்திருக்கின்றன - தராத இடங்களிலே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன; வெற்றி ஏற்படும் வரை நடைபெறுவதற்கான ஊக்கத்தை உழைப்போர் உலகுக்கு அளிக்கும் உறுதி நாளே மே நாள்!

1889-ல் பாரிஸில் கூடிய இரண்டாவது சர்வ தேசீய தொழிலாளர் காங்கிரஸில்தான் மே நாள் பற்றிய தீர்மானம் நிறைவேறியது. அதன்படிதான், மே முதல் நாள், தொழிலாளிகளின் உரிமையைப் பாதுகாக்க, பாட்டாளி மக்களை ஒன்று சேர்க்கும் நாளாக மாறியது. அதுமுதல்; மே விழா மேதினி எங்கும் கொண்டாடப் பெறுகிறது!

மே நாள் உரிமைக்குப் போராடுவதற்குரிய சீரிய நாள்!

அந்தச் சீரிய நாளைக் கொண்டாட வேண்டிய பொறுப்பு தொழிலாளரின் நலத்திலே நாட்டங்கொண்டு. அவர்களின் வாழ்வு வளம்பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பெரும் பங்கு சார்கிறது. உழைப்பாளர்களாலேயே உருவாக்கப்பட்டு, அவர்களையே கொண்டு. அவர்களின் நல்வாழ்வுக்காக பணியாற்றிவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீங்காக் கடமையுமாகும்—மே விழா கொண்டாடுவது என்பது!

சக்திக்கேற்ற உழைப்பு - தேவைக்கேற்ற வசதி என்ற நிலையைக் காண போராடிவரும் திராவிட முன்னேற்றக் கழகம், மே நாளில் அந்த முழக்கத்தை நாடெங்கும் முழங்கச் செய்யுமாக!

சிதறிக் கிடக்கும் பல்வேறு வகைத் தொழிலாளர்களை ஒன்றுபடுத்தல், அவர்களின் இன்றைய நிலைமை உணர்த்துதல், அடைய வேண்டிய நிலையை அறிவித்தல், அவர்களைத் தெளிவடையச் செய்தல், உரிமைப் போராட்டத்துக்குத் தயாராக்குதல், இவைகளைச் செய்ய, பொதுக் கூட்டம் கூட்டுதல், ஊர்வலம் நடத்துதல், கழகக் கொடியேற்றி இலட்சிய விளக்கம் செய்தல், துண்டு வெளியீடுகள் மூலம் மே நாள் சிறப்பை எடுத்துரைத்தல் போன்ற செயல்களில் திராவிட முன்னேற்றக் கிளைக் கழகங்கள் ஈடுபட்டு மே நாள் விழாவைக் கொண்டாட வேண்டுகிறோம்.

இரா. நெடுஞ்செழியன்
செயலாளர் - பிரசாரக் குழு
தி. மு. கழகம்

இரானின் 7 வருட திட்டம்

டெஹ்ரான், ஏப். 27—

இரான் தன் பொருளாதார அபிவிருத்திக்காக 7 வருஷ திட்டம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது என்றும், இது விஷயமாக ஆலோசனை கூற அயல் நாட்டு நிபுணர்கள் அழைக்கப்படுவர் என்றும் தெரிகிறது.

மணமகன் பிணமானான்

லண்டன், ஏப். 27—

ஆக்ஸ்போர்ட்டைச் சேர்ந்த ஒருவர் திருமணம் நடப்பதற்குச் சற்று முன்பு தற்கொலை செய்துகொண்டுவிட்ட பரிதாபச் செய்தி கிடைத்திருக்கிறது.

தனக்கு புற்றுநோய் இருப்பதாக எண்ணி, தான் இனி வாழ லாயக்கில்லை என்று தன் உயிரை இவர் மாய்த்துக்கொண்டாராம். ஆனால் இவருடைய சவம் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டபோது அந்த வியாதி எதுவும் அவர் உடம்பில் காணப்படவில்லை.

தி. மு. க. கிளைகள்

காப்பனுமங்கலம் - சிற்றூர்க்கிளை

கா. மங்கலம், ஏப். 25—

23-4-50 அன்றுமாலை இவ்வூர், செரும்பன்னியூர், என்கின்ற ஆகிய தி. மு. க. தோழர்கள், தோழர் பா. நடராசன் தலைமையில் கூடினர். அதுபோது ஏகமனதாக, "திராவிட முன்னேற்றக் கழகம்—காப்பனுமங்கலம் சிற்றூர்க்கிளை" ஒன்று நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழுவைத் தேர்ந்தெடுத்தனர்.

செயலாளர்:—க. கண்ணையா, துணைச் செயலாளர்கள்:—எம் தங்கவேல், மா. சண்முகசுந்தரன்; பொருள் உறுப்பினர்:—உ. சாமிக்கண்ணு; விளம்பர உறுப்பினர்:-கா. பெருமாள். கடைசியாக சில தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு, தோழர் கா. பெருமாள் நன்றி கூற விழா முடிவுற்றது.

* * *

மருதநாடு—சிற்றூர்க்கிளை

மருதநாடு, ஏப். 23—

இவ்வூர் தி. மு. க. ஆதரவாளர்கள் 22-4-50 அன்றுமாலை, தோழர் மா. பாலு தலைமையின் கீழ் கூடினர். கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்—மருதநாடு சிற்றூர்க்கிளை" நிறுவினர், கூட்டத்தில் கீழ்க்கண்ட செயற்குழு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—மா. பாலு, துணை செயலாளர்:—எஸ். அனிபா, விளம்பர உறுப்பினர்:—ஆ. முனிசாமி, பொருள் உறுப்பினர்:—மாணிக்கம், ஏனைய செயற்குழுவினர்:—ஆர். சுப்பராமன், க. ராஜு, பொ. ஆனைக்குட்டி, ம. ராவுத், கே. நம்மாழ்வார், டி. ஆனந்தர், ப. கண்ணன், கோவிந்தன், சண்முகம், கண்ணன், வெள்ளை.

* * *

கீரனூர்—சிற்றூர்க்கிளை

கீரனூர், ஏப். 24—

இவ்வூர் தி. மு. கழக ஆதரவாளர்கள் 21—4—50 அன்று கூடி, "திராவிட முன்னேற்றக் கழகம்—கீரனூர் சிற்றூர்க்கிளை" நிறுவினர் பின்னர் கீழ்க்கண்ட செயற்குழு ஏகமனதாக நிறுவப்பட்டது.

செயலாளர்:—காசு காதர் இபுறுஹிம். பொருள் உறுப்பினர்-தி. வெங்கட்ராமன், விளம்பர உறுப்பினர்கள்-மு. அ. முகம்மது, உ. கி. மணிராசன் ஏனைய செயற்குழுவினர்-ரா. கணபதி, மு. சண்முகம்; துரை தனுக்கோடி. செயலாளர் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

* * *

ஆய்க்கவுண்டன்பாளையம்—சிற்றூர் உட்கிளை

ஆ. க. பாளையம், ஏப். 8—

30—3—50 வியாழன் அன்று மாலை தோழர் கொ. சுப்பய்யன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில். "திராவிட முன்னேற்றக் கழகம்—ஆய்க்கவுண்டன்பாளையம் சிற்றூர் உட்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-பெ. மு. இராமசாமி உதவிச்செயலாளர்-எ. க. பழனிசாமி, பொருள் உறுப்பினர்-பு க. நாச்சிமுத்து, விளம்பர உறுப்பினர் வெ. முத்து ஏனைய செயற்குழு உறுப்பினர்கள், மா. இராமசாமி, மா. முத்துசாமி, கா. சின்னசாமி, ரா. சின்னசாமி. கிருட்டினசாமி, எ. க. ராமசாமி, ஒ. நாச்சப்பன், தி. மு. ராமசாமி, பி. முத்துசாமி, செ. கா. நாச்சப்பன், எ. கா. நாச்சப்பன், சு. ம. முத்துசாமி, அ. க. நாச்சிமுத்து, பொ. மா, முத்துசாமி, ஆ. ப. சுப்பிரமணியம், பெரியசாமி டெய்லர், பெ. மருதமுத்து. தோழர் இராமசாமி நன்றிகூற கூட்டம் முடிந்தது

திராவிடநாடு ஏஜண்டுத் தோழர்களுக்கு அறிவிப்பு

7—5—50 முதல், ஒவ்வொரு வாரமும் "திராவிடநாடு" தபால், இரயில் பார்சல்கள் பிரதி வெள்ளிக் கிழமைதோறும் இங்கிருந்து அனுப்பப்படும். ஏஜண்டுத் தோழர்கள் இவ்வறிக்கையைக் கவனித்துப் பார்சல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

திராவிட நாடு
மானேஜர்

கோலார்தங்கவயல் திராவிட முன்னேற்றக் கழகம் மே தினக் கூட்டம்

1—5—1950 திங்கட்கிழமை மாலை 5-மணிக்கு மே தின விழாவை ஒட்டி ஓர் பொதுக் கூட்டம் நடத்தப்படும். அது சமயம் சென்னை தோழர் என். வி. நடராசன் அவர்களும், மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவார்கள். ஒலிபெருக்கி உண்டு.

டி. கே. சின்னத்துரை
வி. உ. தி. மு. கழகம்

பெர்லினைவிட்டு அசையமாட்டோம்!

வாஷிங்டன், ஏப். 27—

அடுத்த மாதம் ரஷ்யாவின் திட்டத்தின் மூலம் பெர்லினில் ரத்தம் சிந்தினால், அதற்குப் பொறுப்பாளி ரஷ்யர்கள்தான் என்று யுனைடெட் ஸ்டேட்ஸ் ராஜாங்க மந்திரி டீன் அசிஸன் கூறினார்.

கம்யூனிஸ்டுகளின் போலிப்பாலை பெரும்பு வரையறுத்தலை எதிர்க்க யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரிட்டன் பிரான்ஸ் என்ன திட்டம் போட்டிருக்கிறது என்பதை அவர் வெளியிட மறுத்துவிட்டார்.

ஆனால் அவர் ஒரு விஷயத்தை மட்டும் வெளியிட்டார். அது என்னவானாலும், கம்யூனிஸ்டுகள் என்ன திட்டந்தான் போட்டாலும் பெர்லினைவிட்டு நாங்கள் அசையப் போவதில்லை என்று கூறினார்.

ஜெக்கோஸ்லவாகியா சமாதான கோரிக்கை

லண்டன், ஏப். 27—

லண்டனிலுள்ள ஜெக் ஸ்தானிகாலயம் ஜெக் பார்லிமெண்ட் நிறைவேற்றிய ஒரு சமாதான தீர்மானத்தில், வாசகத்தை பிரிட்டிஷ் அயல்நாட்டிலாகாவிடம் சமர்ப்பித்திருக்கிறது.

ஐ நாசித் ட்டப்பட்ட வல்லரசுகளுக்கிடையே சமாதான ஒப்பந்தம் ஒன்று ஏற்படவேண்டும் என்பதை இத்தீர்மானம் வற்புறுத்துகிறது.

எல்லா நாடுகளிலும் ஆயுத உற்பத்தி செய்வது அப்படியே நிறுத்தப்படவேண்டும் என்றும், மலேயாவிலும், இந்தோ சீனாவிலும் யுத்த சகுவிகளைத் தடுக்கப்படவேண்டும் என்றும் இத்தீர்மானம் கோரியிருக்கிறது.

இத்தீர்மானத்தின் நகல்கள் ஜெக்கோஸ்லவாகியாவின் உறவுள்ள 54 நாடுகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

36 குழந்தைகளுக்கு தந்தை!

பாரிஸ், ஏப். 28—

அமீன்ஸ் என்ற இடத்தைச் சேர்ந்த ஒரு பாட்டாளிக்கு இப்பொழுது 36-வது குழந்தை (சன்) பிறந்திருக்கிறது. இது இரண்டாவது மனைவிக்குப் பிறந்த 12-வது குழந்தையாம்.

இவருடைய முதல் மனைவி 24 குழந்தைகளைப் பெற்றுவிட்டு தன் 44 வயதில் காலமானாராம்.

(ருயேடர்)

திருமணம்

30—4—50-ல் தோழர் மூத்துலிங்கனுக்கும் தோழியர். கஸ்தூரி அம்மைக்கும், தோழர் வே. த. அர்ச்சுனனார் தலைமையில் நடைபெறும்.

இடம்: கொளத்தூர் பஜனை கோவில் தெரு, 8.

செஞ்சீனு வந்துள்ள ரஷியத் துருப்புகள்

ஜெர்மன் யுத்தக் கைதிகளும் உள்ளனவாம்

சிங்கப்பூர், ஏப். 28—

ஷாங்கேக்கு ரஷ்யர்கள் அனுப்பியுள்ள துருப்புகள், விமானிகள், டெக்னீஷியன்கள் முதலியவர்களில் அநேகர் ஜெர்மன் யுத்தக் கைதிகள் என்று இங்கு கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

இவர்கள் 1945ல் கைதுசெய்யப்பட்டு ஸைபீரியாவுக்கு அனுப்பப்பட்டவர்கள் என்று தெரியவருகிறது.

காமாவுக்கும் அவர் மாமாவுக்குமிடையே சமரஸம்

லண்டன், ஏப். 25—

ஸெட்லே காமாவும் அவருடைய மாமாவும் சமாசத்திற்கு வர முடிவு செய்து விட்டதாகவும், இவர்களிருவரும் சீக்கிரமே சந்தித்துப் பேச விருக்கின்றனர் என்றும் ரேப்டவுன் செய்தி ஒன்று கூறுகிறது.

வெள்ளை மாதை மணந்தபின், காமா அவர் மாமாவை நேரில் சந்திக்கப்போவது இதுவே முதல் தடவை.

காமாவுக்கு அவர் தகப்பனார் எஸ்டேட் மீதுள்ள உரிமையை கோர்ட்டுக்குப் போகாமலேயே அளித்துவிட சமாசம் ஏற்பட்டு விடும் என்று கூறப்படுகிறது.

சூளை தி. மு. கழகத் திறப்பு விழா

1—5—50 திங்கள் காலை 8 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும்.

சூளை தி. மு. கழகத்தார்

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.